

# கீழ்ப்பாலை

கவிஞர் வாகரை வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பாவை

(நெடும்பாடல்)

## கவிஞர் வாகரைவாணன்

வெளியீடு:

சண்முகா பதிப்பகம்

நல்லூர் — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு: பங்குனி, 1980

உரிமை: ஆசிரியர்களுக்கே.

விலை ரூபா: 2-50.

அச்சிட்டோர்:-

கண்ணன் அச்சகம்

நல்லூர் - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப்பு

தமிழைத் தாயாக வணங்குபவன் நான். இந்த வழிபாட்டுணர்வே—

'தமிழ்ப்பாவை' என்னும் இக்கவிதை நூலை எழுதத் தூண்டிற்று. இதில்—

தமிழின் அருமை—பெருமை—வரலாறு—தாய்நாட்டு வளம்—

இவைபற்றிச் சுருக்கமாக எழுதியுள்ளேன். எழுதியதில் தவறிருந்தால் எடுத்துக் காட்டுங்கள்—திருத்திக் கொள்கிறேன்.

'தமிழ்ப்பாவை' தவழ்ந்து நடை பழகிட பாண்டிய மன்னன் மட்டுமல்ல—யாழ்நகரைச் சேர்ந்த திரு. சு. தர்மலிங்கம் (உரும்பிராய்) நல்லூர் சண்முகா பதிப்பக உரிமையாளர் திரு.கே.சண்முகநாதன் (மணி) ஆகிய இருவரும் பெரிதும் காரணமாவார்கள். அந்தத் தமிழ் நெஞ்சங்கள் இரண்டிற்கும் என் அன்பார்ந்த நன்றி!

'தமிழ்ப்பாவை'க்குப் புதியதோர் முத்தாரம் (அணிந்துரை) சூட்டி மகிழும் திரு. ஈழவேந்தன் அவர்களுக்கும் என் இதயநன்றி!

'தமிழ்ப்பாவை'யை அலங்கரிக்கும் வண்ணம் அழகிய ஓவியம் தீட்டி உதவிய ஓவியர் திரு. வரன் (வரன் ஆட்ஸ்) அவர்களுக்கும் கண்ணன் அச்சகத்தார்க்கும் (நல்லூர்) என் அன்புநன்றி!

இச்சமயத்தில்—

'தமிழ்ப்பாவை'யை மக்கள் மன்றத்தில் (வெளியீட்டு விழா மூலம்) அறிமுகப்படுத்த ஆவல் கொண்டிருக்கும் நண்பர்தாழை—க. செல்வநாயகம் (கதிரவன் செயல்மன்றம், பேய்த்தாழை) அவர்களை நான் எப்படி மறந்திட இயலும்? மனமார்ந்த நன்றி அவருக்கும்! கடைசியாக—

எனது கவிதையில் இலக்கணத்தைவிட இதயத்தையே பாருங்கள். இது, என் அன்பு வேண்டுகோள் இலக்கிய ஆர்வலர்களிடம்;

காரணம்—காரிகையை (யாப்பருங் கலக்காரிகை) விட, கவிதையின் உண்மையான இலக்கணம் அதனுள் பொங்கித் ததும்பும் உணர்ச்சியும் ஓசையுமே,—இது, என் நம்பிக்கை! இதனால் நான் இலக்கணத் தோடு 'இடி'த்துக் கொள்வதுமுண்டு. ஏன்-மகாகவி பாரதியே—

> ஆசைதருங் கோடி அதிசயங்கள் கண்டதிலே
> ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா

என்று ஓங்காரமாகப் பாடவில்லையா?

வாகரை
மட்டக்களப்பு
10-3-80

அன்பன்
**வாகரைவாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தாரம்

உள்ளத்தில் இயல்பாக எழுகின்ற உணர்ச்சிக்கு சொற்களில் வடிவம் கொடுக்கின்ற போது அது கவிதையாகின்றது. ஒரு கவிதையின் தோற்றத்திற்கு, கவிமணி சொன்னதுபோல் இன்பப் பெருக்கு மட்டுமல்ல துன்ப உணர்வும் துணைநிற்கும்.

நம் கவிஞர் வாகரைவாணனைப் பொறுத்தவரையில் தமிழரின் இன்றை இழிநிலை அவரின் உள்ளத்தில் பெரும் துன்பப்புயலை வீசச் செய்துள்ளது, அந்தத் துன்பப் புயல் துடித்தெழும் நெடுங் கவிதையாக 'தமிழ்ப்பாவை' வடிவில் மலர்ந்துள்ளது:

இருபத்தி நான்கு பக்கங்களில் பெருக்கெடுத்தோடும் கவிஞரின் கவிதையில் இடம் பெற்றுள்ள சொற்கள் அவர்தேடிச்சென்ற சொற்களாகவன்றி அவரை நாடிவந்த சொற்களாகவே விளங்குகின்றன. ஆம்! வாகரைவாணன்தான் ஒரு பிறவிக் கவிஞர் என்பதை எவரும் ஐயுறு வண்ணம் நிலைநாட்டியுள்ளார்.

'எண்ணத்தில் நீந்துகிறேன்' 'பயணம்' 'சுட்டபொன்' முதலான கவிதைத் தொகுதிகளை ஏற்கனவே தமிழ்ஈழத்திற்கும் ஏனைய தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் உவந்து அளித்துள்ள வாகரைவாணன் இன்று தன் 'தமிழ்ப்பாவை'யை எம்மிடையே நடைபயில விட்டிருப்பது எமக்கு எல்லையற்ற இன்பத்தினைத் தருகின்றது.

கவிஞர் காசி ஆனந்தன் அளித்த 'தமிழன் கனவை'ச் சுவைத்து மகிழ்ந்த நான் -- விரும்பிய அளவு விடுதலை வேட்கை பெற்று வீறு பெற்றுள்ள நான்—'தமிழ்ப் பாவை'யைப் பயின்ற போது மேலும் விடுதலை உணர்வு என்னுள் எழுவதை உணர்கின்றேன். 'தமிழன் கன'வின் சாயல் படிந்துள்ள இந்நூல் நாம் விரும்பும் விடுதலை வேட்கைகையை அளிப்பதோடு, கவிதை வடிவில் வழங்கப்பட்டுள்ள ஒரு வரலாற்றுக் களஞ்சியமாகவும்விளங்குகின்றது.

'தேவனவன் பெற்றெடுக்க தென் மதுரைப்பாண்டியனுர்ஆவலுடன் வளர்த்த மகளாகிய தமிழ்ப்பாவையின் படிப்படியான வளர்ச்சி பாங்குடன் பகரப்படுகின்றது. 'உன் பெருமை ஒன்றல்ல ஒருகோடி' என்று புகழும் இப்புலவன் ஒல்காப் புகழ்வாய்ந்த தொல்காப்பியன் செய்த பொற்சிறையையும் பின்பு தமிழ் முனிவன் வள்ளுவன் அவளுக்கூட்டிய முப்பாலால் தமிழ் ஞானப்பழமாக அவள் ஞாலத்தில் ஒளி வீசுவதையும் பின் காலப் போக்கில் சிலம்பு, மேகலை, சிந்தாமணி ஆகிய அணிகளால் அலங்கரிக்கப்பட்ட அவள் எல்லோரையும் ஈர்க்கின்ற தன்மையையும் கவிஞர் சொல்லிச் செல்லும் பாங்கு எம்மைச் செம்மாந்திருக்கச் செய்கிறது,

'தமிழ்ப்பாவை' சங்க காலத்தில் பெற்றிருந்த சிறப்பினையும் களப்பிரர் காலத்தில் அவள் அடைந்த கலக்கத்தையும், பின்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவர் காலத்தில்பெற்ற எழுச்சியையும், அடுத்துசோழப்பேரரசர் காலத்தில் உலகோச்சிய ஒப்பற்ற தன்மையையும் ''நிதமில்லை எதுவுமென்ற நிச்சய வாக்கு மெய்க்க'' முகமதியர், நாயக்கர், ஐரோப்பியர் காலங்களில் அவள் மூலைக்குள் தள்ளப்பட்டதையும் நினைவுபடுத்தி, பாட்டிற் கொரு புலவன் பாரதியின் பாட்டுத்திறத்தால் அவள் மீண்டும் வாழ்வும் வளமும் பெற்ற தன்மையையும் சுவை சொட்ட மொழிகின்றார் நம் கவிஞர். ஆனால் ஆரிய மாயையினால் அழகிழந்த தமிழ் அணங்கிற்குப் புதுப் பொலிவு தந்த பாரதிதாசன், 'தனித் தமிழ் இயக்கத் தந்தை' மறைமலை அடிகள், தமிழகத்தில் தமிழ்த் தென்றலை வீசச் செய்த திரு. வி.க. தமிழ் நாட்டின் அழுக்கினை அகற்றிய வண்ணனாய், தமிழக அரசெனும் நாவாயைச் செம்மையுறச் செலுத்திய மாலுமியாம் அறிஞர் அண்ணா ஆகிய சான்றோரை ஏனோநினைவிற் கொள்ளாது விட்டுவிட்டார் நம் கவிஞர் வாகரைவாணன் அவர்கள்.

தமிழகத்தில் ஏற்பட்ட தகை சான்ற முன்னேற்றத்தை மொழிந்து செல்லும் கவிஞர், ஈழமண்ணில் தமிழர்க்கேற்படும் இன்னல்களை இதயம் வெடிக்கும் விதத்தில் எடுத்துரைக்கின்றார். நாளும், நம் தமிழீழத்தின் தலங்களைப் பறித்து தம் குடியை ஏற்றும் சிங்கள ஆதிக்கத்தை கவிஞர் சாடும் முறை கொதிப்படைந்துள்ள இன்றைய ஈழத் தமிழரின் நிலையை மிகத் திறம்படப்படம் பிடித்துக் காட்டுகிறது. என்னும்—

வீழ்ச்சியுற்ற எம் இனம் எழுச்சிபெற, நம் உள்ளத்தில்தெம்பு ஏற்பட—

''தருக நீ பாவாய் உந்தன்
 தனிப் பெரும் ஆசிச் செல்வம்
வருக நீ பாவாய் எங்கள்
 வலக்கரமாக! வெற்றி
பெருகவே செய்வாய் நீயே
 பிள்ளைகள் எல்லாம் கூடி
உருகவே கேட்டு நின்றோம்
 ஓடோடி வருவாய் தாயே!''

என்று கவிஞர் தமிழ்த் தாய்க்கு விடும் வேண்டுகோள், தமிழன் இனி வாழத்தான் போகின்றான்— தமிழ் அன்னை ஈழத்தில் அரியணைஏறத்தான் போகிறாள் என்ற நம்பிக்கை ஒளியை நம் உள்ளத்தில் மூட்டிவிடுகிறது,

சுருங்கச் சொல்லின் கவிஞர் வாகரைவாணனின் 'தமிழ்ப் பாவை' தமிழரின் இன்றையத் தேவையை நிறைவு செய்வதோடு எதிர்காலத்திலும் நம்மவா ஏற்றம் பெறத்துணை நிற்கும் நூலாகத் துலங்குகிறது. தமிழ்ப்பாவையைத் தந்த கவிஞர் அவர்களை வாழ்க வாழ்க வென வாழ்த்துகிறேன்.

அன்பன்

**ஈழவேந்தன்**

கொழும்புத்துறை
யாழ்ப்பாணம், 19-4-80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை மாநகரிலே......

தேவனவன் பெற்றெடுக்க
  தென்மதுரைப் பாண்டியனார்
ஆவலுடன் வளர்த்த மகள்
  அழகு தமிழ்ப் பெண்பாவாய்!
ஏவலரில் ஒருவன் நான்
  என்கையால் உனைத் தூக்கி
ஆவலது தீரும் வரை
  அணைத்திருக்க வேண்டுமம்மா!

நீ வளர்ந்த விதம் அறிவேன்!
  நில வெறிக்கும் மாளிகையில்
தீ வளர்ந்த பொன் னெடுத்து
  செய்த மணித் தொட்டிலிலே
மாவளர்ந்த கண்மூடி
  மகளே நீ துயில் கொள்வாய்
நாவளர்ந்த பாட லென
  நன் கிசைப்பாள் தென்றலவள்

தொட்டிலிலே வளர்ந்த உனைத்
  தூக்கி இரு கையாலும்
'பட்டு' எனத் தம் தோளில்
  பாண்டியனார் அணைத்திருப்பார்
கட்டி அவர் கழுத்து தனை
  கனிச்சாறு பெய்வாய் நீ
விட்டதிலை நிலத்தில் உனை
  வீங்கிப் போம் பாத மென்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாளிகையில் வளர்ந்தாய் நீ!
மன்னனவன் மடிதனையே
தூளி என நீ எண்ணிச்
சுகம் பெறுவாய்! ஆசையினுல்
ஆளி எனத் தோன்றுந் தன்
அணையினிலே இருத்தி உனை
வாழி! என மன மகிழ்வார்
வளர்த்த உன் தந்தையம்மா!

நிலம் மீது கால் வைத்து
நீ நடக்க விரும்பாத
குலத் தலைவன் உன்னருகில்
கோது கிளி, குயில், அன்னம்
கலை யழகு தோகை மயில்
கண்முன்னே வளர விட்டான்
இலையழகு இது போல
என்ற நடை நீ கற்ருய்!

உன்னைப் போல் இன்னெருத்தி
ஒடியுமுன் இடை போன்ருள்
விண்ணைப் போல் உயர்ந்த புது
வெண்மாட முற்றமதில்
'என்னைப் போல் நட' என்று
எழுந்து நடை பழக்கிடுவாள்
கண்ணைப்போல் வந்தவளே
கவனித்தாய் அவள் நடையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடை மட்டும் நீ கற்றாய்
நளினமோ அவள் கற்றாள்
பெடை அன்னம், தோகை மயில்
பெண்ணானது சாயல் தனை
கொடையாகப் பெற்று மிகக்
குதூகலிக்கும்! கிளி, குயிலாள்
தடையின்றி உன் மழலைத்
தனி மொழியைக் கற்றுணரும்!

மானும் உன் பக்கம் வர
மன்னனவன் விட்டு வைத்தான்
ஏனோதான் அது ஓடி
எங்கெங்கோ மறைந்து போம்
தேனிதழாய்! அதன் செய்கை
தேர்ந்தாயோ? நீ கொண்ட
வான்புநவ விழி கண்டு
வந்ததம்மா நாணதற்கு!

தங்கம் நீ வளர்ந்திட்டாய்
தாழம் பூ சிரித்தாற் போல்
மங்கை நீ பூத்திட்டாய்
மன்னனவன் தோள் இறங்கி
பங்கயப் பூங் கால் வைத்து
பைய மண் பார்த்து நீ
திங்கள் போல் நடந்திட்டாய்
தேவதையே தோற்றுப் போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றமதில் உனைக் கண்ட
முட்டாள்கள் தாமும் மிகக்
கற்றறிந் தோர் ஆனார்கள்
கவி பொழிய லானார்கள்
பெற்ற பெரும் பேறென்றே
பெண்மகளே உனை ஏத்த
மற்று மொரு மனை செய்தார்
'மன்றம்' எனப் பேர்தந்தார்!

மன்றமதில் நிறைந்தாய் நீ
மங்கலங்கள் குவித்தாய் நீ
நின்றந்தப் புலவ ரெல்லாம்
நினைப்பாடித் தொழுதெழுவார்
'ஒன்றல்ல உன் பெருமை
ஒரு கோடி எனில் குறையே'
என்றந்தத் தால் வேந்தர்
எத்தனையோ எடுத்துரைப்பார்

இலக்கியமாய் எழுந்தாய் நீ
எழில் கொஞ்சும் உன் தோற்றம்
கலக்கியது ஓர் மனதை
'காப்பிய'னும் அவன் நாமம்
விலக்கியுனை எடுத் தோடி
வினை செய்வார் பிறரென்றே
இலக்கணமாம் சிறை செய்து
இன்ப முனைப் பூட்டி வைத்தான்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டி உனை வைத்தாலும்
புதுப்புது அலங்காரம்
சூட்டி மனம் மகிழ்ந்தார்கள்
சொந்த மகள் நலம் பேண
வீட்டினிலே பெரும் போட்டி
வீதிக்கும் வந்ததுவே
நாட்டினிலே உன் பெருமை
நாளெல்லாம் வளர்ந்த தம்மா!

எப்பாலும் உன் பெருமை
இமயம் போல் வளருங்கால்,
ஒப்பில்லை அதற் கென்றே
உலகெல்லாம் உணர்ந்தேத்த
முப்பாலை முனி தந்தான்
முழுதும் நீ பருகியதால்
தப்பில்லை அவன் கணக்கு............
தமிழ் ஞானப் பழமன்றோ!

அண்ணனவன் ஆள வென
அரியணையை விட்டிறங்கி
மண்ணுலக வாழ்க்கை ஒரு
மாய மென நம்பியதால்
எண்ண மெலாம் அவன் பக்கம்
என்றிருந்த ஓர் இளைஞன்
கன்னி மகள் கவர்ந்தாய் நீ
கவிஞனாய் அவன் ஆனான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்க முடி சூடி
மன்றரசு செய்தவளே!
காணிக்கை என்றுனக்கு
கவிஞனவன் ஓர் 'சிலம்பு'
ஆணிப் பொன் பாதமதில்
அணிந்தழகு செய்திட்டான்
வாணிப் பெண் நீ அதனுல்
வளர்த்த புகழ் பெருங்கடலே!

காலினிலே நீ அணிந்த
கவின் 'சிலம்பு' கண்டொருவன்
நூலடையில் 'மேகலை'யை
நொடிப் பொழுதில் தந்திட்டான்
கோலமிகு உன் மார்பில்
குன்ரு ஒளி 'சிந்தாமணி'
மாலையினை இன்னு மொரு
மாமுனிவன் மகிழ்ந்தளித்தான்!

ஆளுக்கோர் அணி செய்து
அல்லிப் பூந் தண்டுக் கை
வாளுக்கோ? இல்லையது
'வளையாபதி'க் கென்றே
நாளுக்கோர் துதி செய்தார்
நங்கையுன் காதுக்கு
கோளுக்கோர் நிகராகக்
'குண்டல கேசி' தந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமதில் அமர்ந்தாலும்
சஞ்சீவி உனைத் தூக்கி
எங்கெங்கோ சென்றூர்கள்
இதயத்தால் புலவர்கள்
அங்கெல்லாம் மலர்ந்தாய் நீ
அதைச் சொல்லி நான் பாட
பொங்கு மென் நெஞ்சத்துள்
புகுவாய் நீ தமிழ்ப்பாவாய்!

தென் பொதிகைச் சாரலிலே
தென்றலவள் கூடவர
கண் பொதியும் எழிற் செல்வம்
களித்து நீ நடந்தாயாம்
மண் பொதியும் வைகையிலே
மலரோடு புனலாடி
பொன் பொதியும் உடலோடு
புகார் நோக்கி எழுந்தாயாம்!

நீ நடந்த வழி யெல்லாம்
நின்றிருந்த இள மரங்கள்
பூ அள்ளித் தூவினவாம்
பொன் மயில்கள் இனம் கண்டு
வா வென்று வர வேற்று
வன்ன நடம் செய்தனவாம்
கோமகளே உனை ஏத்தி
குயில் பாடி மகிழ்ந்தனவாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூம்புகாரிலே . . . . . .

கூடல் மா நகரத்துக்
குழந்தையுனே வரவேற்க
ஆடல் மா நகரத்து
ஆத்திப் பூ வேந்தனவன்
ஓடோடி வந்தானும்
உச்சி தனே முகர்ந்தானும்
வாடாத மாலே உனே
வாழ்த்தாத நாவுமுண்டோ?

பூம்புகார்ப் பட்டினத்தில்
புகுந்தது மே தமிழ்ப் பாவாய்
தீம் பழத்தைப் பிளந்தாற் போல்
திருவாயில் நகை கொஞ்ச
வேம்பு தார் அணிந்து நீ
வீற்றிருந்தாய் அரியணையில்
ஓம்புமுன் பணி செய்து
உளம் மகிழ்ந்தான் சோழனவன்!

இந்திரப் பேரரசனுக்கு
எடுக்கு மொரு விழாப் போல
சந்திரப் பேரரசிக்கு............
சலங்கை ஒலி கேட்டதுமே
மந்திரப் பூ போட்டாற் போல்
மன்னன் அவை மயங்கிற்றும்
அந்தரத்தில் சுழன்றுடும்
அரம்பையரைக் காணோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்கொளிக்கும் மேனியதால்
'பொன்னி' எனப் பெயர் பெற்ற
கன்னியவள் புகார் நாட்டின்
கா விரிந்து பொங்குவதால்
கண்ணி கயலாளே! அவள்
'காவிரி' யும் எனச் சொல்வார்
நண்ணியவள் பார்க்க நீ
நடந்தாயாம் தமிழ்ப்பாவாய்!

பட்டும் மண்படாது போல்
பாவை நீ மெதுவாக
எட்டிக் கால் வைத்திடுவாய்
எழிற் சிலம் பொலி கேட்டு
பட்டெனக் கண் திறப்பாள்
படகு போல் நீ நடக்க
திட்டமோ போட்டிக்கு;
தெரிந்தது போல் அவள் கேட்பாள்!

போட்டி ஏன் நமக்குள்ளே?
பொறாமை தான் எனக்கில்லை!
நாட்டிலே உன் பெருமை
நாவெல்லாம் சொன்னதினால்
நாட்டியச் சபை நீங்கி
நான் உனைக் காணவந்தேன்
தீட்டுண்டோ இதில்? என்பாய்
தென்பாண்டித் தமிழ்ப்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் கேள்வி கேட்டு அவள்
உடலெல்லாம் சிலிர்த்தவளாய்
'என் கேள்வி கேட்டீர்கள்?
என் நடையும் நடையாமோ?
அன்னத்திற் கிணையென்று
ஆர் சொன்னார் இன்றென்றை?
எண்ணத்திற் பிழையாமோ?
எனைப் பொறுக்க' என்றிரப்பாள்!

காவிரியாள் சொற் கேட்டு
கலகலத்து நீ சிரித்து
பூவிரியும் அவள் மேனி
புல்லி மனம் மகிழ்ந்தவளாய்
'கோப மெனக் கில்லையடி
கூட என் பிறந்தவளே
ஆவி நீ' என்றவளை
அணைப்பாயே தமிழ்ப்பாவாய்!

குழந்தையென அவள் உனது
கோமளப் பூங் கைகளுக்குள்
விழுந்திடவே நீ பார்த்து
விரிந்துயர்ந்த பாசத்தால்
எழுந்து வர மனமின்றி
இருந்தாயே தமிழ்ப்பாவாய்!
கொழுந்து அவள் உன் மேனி
கொடி யென்று படர்ந்தாளோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படர்ந்தவளை நீ மெல்லப்
பற்றி கீழ் இறக்கியதும்
நடந்தாயே தமிழ்ப் பாவாய்
நங்கையவள் உன் விழியில்
கிடந்தாளே குளமாக
சிற்றுப் போல் இடையாளே
தொடர்ந்தாயோ பயணத்தை
தொல் பதியாம் வஞ்சிக்கே!

பூம் புகார் மன்னனவன்
பூவை உனை வழியனுப்ப
கூம்பாத மாலையுடன்
கூடியே வந்திருந்தான்
தேம்பாத மக்களில்லை
தேவியுன் பிரிவவர்க்கு
வேம்பாகக் கசந்ததம்மா
விழியெல்லாம் 'பொன்னி' நின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஞ்சி மாநகரிலே . . , .

சோழனவன் நாடு விட்டு
தூங்காத நினைவுடனே
வேழமது விளையாடும்
வில்லவனின் ஊருக்கே
வாளரசி நீ சென்ருய்
வஞ்சியிலே எல்லோரும்
தாளிட்டு வரவேற்ருர்
தார் வேந்தன் உனைத் தொழுதான்;

செந்தமிழே! உனைத் தொழுத
சேர நாட்டரசன் அவன்
சொந்த தன் பல்லக்கில்
தோகை உனை இருத்தாட்டி
நொந்து தோள் சுமந்தானே
நோக்கியவர் மனமெல்லாம்
விந்தையிது என்று பெரு
வீதியெல்லாம் மொய்த்தாரே!

ஊர் உலா சென்ருய் நீ
ஒரு நாலுபடை சூழ
பேர் உலா சென்ருய் நீ
பெருமாட்டி உன் போல
ஆர் உலா சென்ருர்கள்?
அறிந்த வான் தேவர்களும்
'போர் உலா' என்று தம்
புலனடங்கிப் போனூரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயல் நாட்டுப் பெண்ணென்று
கண் உன்னைச் சொன்னாலும்
புயல் நாட்டுப் பெண்ணாவாய்
புருவம் வில்லானதால்
வயல் நாட்டுப் பெண்ணே நீ
வன் புலி வீரத்தால்
அயல் நாட்டுக் கவிஞர்களும்
அருகமர்ந்த சபைதனிலே,

முந்நாட்டின் சொத்தென்று
முடிந் தொருவன் புகழ்பாட
அந்நாட்டின் புலவரெலாம்
'ஆமாமாம்' என்றுரைத்தார்
என் னாட்டின் சொத்தென்பான்
இந்நேரம் ஓர் புலவன்
செந் நாவைத் திறந்திட்டான்
செவி யேற்கும் அவையெல்லாம்!

இசை வீணைப் பேச்சாலே
இராவணனின் நாட்டுக்கும்
அசையாத சொத்தென்பான்
அவன் பேச்சின் உண்மையெல்லாம்
இசைவாகக் கேட்டரசன்
எழுந்து அவை முன்னாலே
பசையுண்டோ நம் பேச்சில்
பாருக்கே பொதுவான,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வமதை நமக்கென்றே
செப்புவதும் முறையாமோ?
கல் தோன்றி மண்தோன்ருக்
காலத்தே பிறந்தவளை
எல்லோர்க்கும் அன்னையென
இறைவனவன் தந்தவளை
உள்ளத்தால் குறுகிநாம்
உரிமை கொண்டாடுவதோ?

அரசனவன் பேச்சின் முழு
அர்த்தத்தைப் புரிந்தவர்கள்
சிரசுதனை நிமிர்த்தி மனத்
தெளிவு மிகப் பெற்றவராய்
முரசு எனக் கையொலித்தார்
முந்து தமிழ்ப் பாவாய் நீ
தரிசு நிலம் வளமான
தன்மையென முகம் மலர்ந்தாய்!

மன்னனின் அவையில் தந்த
மாபெரும் வரவேற்பெல்லாம்
அன்னமே நீயும் பெற்று
அலைவளம் மிக்க நாட்டை
எண்ணியே பார்க்கச் செல்வாய்
எத்தனை அழகுச் செல்வம்!
கண்ணென இரண்டைத் தந்த
கடவுளைப் பாவி என்பாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரத்துப் பெண்கள் போல
  செவ்விள நீர்க் குலைகள்
பாரத்தைத் தாங்குந் தென்னை
  பலமிலா இடுப்புக் கொஞ்சம்
சோரத்தான் செய்யும்! அந்தச்
  சொக்கிடும் அழகு கண்டு
ஆரத்தான் தழுவும் காற்று
  அச்சுகம் ஒன்றே போதும்!

நாணத்தை விட்டுத் தங்கள்
  நகில்களைக் காட்டும் பெண்கள்
பானமுந் தருவார், ஆங்கு
  பசியென வருவோர்க்கெல்லாம்!
தானமும் இது போல் உண்டோ?
  தாசிகள் வேண்டும் நாட்டில்!
ஊனமும் இல்லை இந்த
  உண்மையை ஏற்பதாலே!

அங்கங்கே வானம் மீது
  அப்பிய நீலம் போல
துங்கவே வளர்ந்த குன்றம்
  தூரிகை இழுத்தாற் போல
பொங்கவே அருவி வீழும்
  புலவர்கள் இதனைக் காணில்
கங்கையைத் தலையில் வைத்துக்
  கட்டிய சிவனே என்பார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையிரு பக்கம் கட்டி
காவலுக்கிருங்கள் என்று
நிரை நிரையாகப் பச்சை
நெடுமரச் சோலை நட்டு
உறைந்திடும் மங்கை! நெஞ்சில்
உத்தமத் துறவி போல
கறையது கழுவுஞ் செல்வி
கண்டவர் வணங்கிச் செல்வார்!

சேரனின் செல்வம்! நாட்டின்
செழிப்பதன் மூலம், மக்கள்
ஆறெனச் சொல்வார் அவளை
ஆறியே இருத்தலாலே!
பாரினில் இவளைப் போல
பத்துப்பேர் இருந்தால் போதும்
போரது நிகழா தெங்கும்
பொங்கிடும் அமைதி வெள்ளம்!

'போரது இல்லை யென்றால்
புண்ணியம் இல்லை, நாங்கள்
ஊரினில் வாழ்தலாலே
உணருக' என்றே யானை
ஊர்வலம் தோன்றும் ஆங்கே
உரைத்திடும் மீண்டும் பார்த்து
'வீரமே யார்க்கும் வாழ்க்கை
வில்லவன் தேசந்தன்னில்!?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேழங்கள் பேச்சைக் கேட்டு
வெம்புலிக் கூட்டமெல்லாம்
தாளங்கள் போடும் தங்கள்
தலையினை ஆட்டி ஆட்டி
நாளங்கள் புடைக்கச் சொல்லும்
நகமதைத் தூக்கிக் காட்டி
வாளெங்கள் உடலில் உண்டு
வரும்பகை அறுத்தே தீர்வோம்!

பச்சைப்பட்டாடை கட்டி
'பாவங்கள்' முகத்தில் தேக்கி
கச்சிதமாக ஆடும்
கதகளிப் பெண்கள் போல
இச்சையை எழுப்பும் பன்னீர்
இளந்தளிர்க் கொடிகள், வதனம்
அச்சினிற் போட்டாற் போல
அழகழகாகப் பூக்கள்!

கதிரவன் கிரணங் கூட
காலது வையாக் காடு
முது பெரும் மரங்கள்! கிளைகள்
முறிந்தவை வீழும் போது
அதிர் இடி போலவாகும்
அலறிடும் பறவைக் கூட்டம்
குதியினில் நிற்குமந்தக்
குறுமுயல்; நரிகளெல்லாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையனின் நாட்டின் சாட்சி
மங்கை நீ பார்த்துப் பார்த்து
தலையெலாம் மயங்கிப்போவாய்
தடுமாறிப் போகும் கால்கள்
நிலையிது கண்ட மன்னன்
நெஞ்சது பதறி! வண்ணக்
கலை மணீ! உன்னைத் தேரில்
காற்றென ஏற்றிச் செல்வான்!

வஞ்சியை நீங்கும் வேளை
வந்ததும், மன்னன் உன்னைக்
கெஞ்சுவான் காலில் வீழ்ந்து
'கிளியே நீ இன்னும் காலம்
துஞ்சுவாய் நாட்டில்' என்று
தோகை நீ நெஞ்சம் ஆற
கொஞ்சுவாய் வார்த்தையாலே
கொற்றவன் குழறிப் போவான்!

மதுரையம் பதியை மீண்டும்
மடந்தை நீ அடைந்த போது
'கதிரை நான் கண்டேன்' என்று
களிப்பினால் உன்னைக் கட்டி
குதிரைகள், யானை, மேகம்
குலவு தேர்ப்படைகளோடு
புதுவிதச் சிறப்புச் செய்து
பொன்னகர் சேர்ப்பான் தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியும் மாட்சியும்

வளம் மிகு உந்தன் ஆட்சி
வைகையில் நடக்கும்! பூக்கள்
குளமெனக் கூடல் எங்கும்
குதூகலம் பொங்கும் காலம்.........
களப்பிரர் என்றோர் சாதி
கள்ளர் போல் நுழையலானார்
அழகெலாம் கெட்டதம்மா
அய்யகோ என்ன சொல்வேன்!

கள்ளர்கள் தம்மை வென்று
கடுங்கோன் பாண்டி மன்னன்
கள்ளவிழ் கோதாய்! உன்னைக்
கட்டிலில் அமரச் செய்தான்
பல்லவர் என்றோர் வேறு
படைஞர்கள் காஞ்சி நாட்டில்
நல்லதோர் அரசைச் செய்தார்
நலம் பல கண்டாயம்மா!

பல்லவர் காலம், தெய்வப்
பக்தியின் காலம்! நூலோர்
சொல்லினில் தவழ்ந்தாய்! பலாவின்
சுளையென இனித்தாய்! உன்னைக்
கல்லிலும் கண்டார், கண்டே!
கலையெனத் தொழுதார்! இதனை
மல்லையிற் கண்டேனம்மா
மரகதக் கடலினோரம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர் போன பின்னுல்
நம் பெரும் சோழ மன்னர்
வல்லவர் ஆனுர் நாட்டில்
வார்கடல் கடந்தும் தங்கள்
எல்லையை விரியச் செய்தார்
ஈடிணையில்லாக் காலம்
செல்லமே உன்னை எங்கும்
சிங்காசனம் ஏற்றி வைத்தார்!

காவிய காலம்! கல்விக்
கழகமாம்! கம்பன் சொல்லால்
ஓவியம் தீட்டிப் பெண்ணே
உன்னெழில் வடித்த காலம்
பாவிகம் தெரிந்த கூத்தன்
பார் புகழேந்தி நின்ருேன்
நாவினில் உன்னைச் சூடி
நான் முகன் ஆன காலம்!

சோழர்கள் காலம் பங்க
சுந்தர பாண்டி மன்னன்
ஆளவே வந்தான் நாட்டில்
அழகே நீ மகிழ்ந்தாய் நெஞ்சில்!
மாளவே அவனும் பின்னுல்
மன்னர் நம் குடும்பந் தன்னில்
நீளவே பதவிப் போட்டி
நிலமது கவர்ந்தார் மாற்ருர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்ந்த தமிழகம்....

முகமது மதத்தைச் சேர்ந்தோன்
மூர்க்கனும் மாலிக்கபூர்
சகமதை வாளால் வெல்லச்
சத்தியம் செய்தான் போல
அகமது நுழைந்தான்! அந்தோ............
அணிமணி யெல்லாம் கொண்டான்!
நகமது பிரிந்த சதையாய்
நங்கை நீ துடித்துப் போனய்!

இவர்களும் ஒழிய மீண்டும்
இன்னுமோர் அயலார் கூட்டம்
கவர்ந்தது உந்தன் நாட்டை
கன்னிஉன் மகரக் கண்கள்
சிவந்தன அழுகையாலே
செய்வதும் அறியாய் நீயும்
உவந்தவர் போல உன்னை
ஒரு சிறு மதிப்புச் செய்தார்!

நாயக்கர் இவர்கள் உந்தன்
நாட்டினை விட்டுச் சாக
ஆயத்தைப் பெரிதாய்க் கொள்ளும்
ஐரோப்பியர் வந்தார்! நீயும்
வாயது அடைத்துப் போனய்
வாணிபக் கூட்டம் மாறி
தேயத்தை ஆளும்! எங்கள்
திருவே உன் சோதி மங்கும்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னியர் ஆன போதும்
ஆய்ந்த நற் புலவரானோர்
கன்னி உன் எழிலைக் கண்டு
காதலால் உருக நெஞ்சில்
பொன்னெனப் பூக்கும் கோடி
புதுமலர்க் கவிதை அள்ளி
உன்னடி படைப்பார் அம்மா
உலகமேவணங்கு மன்றோ!

வெள்ளையர் ஆட்சிக் காலம்!
விடுதலை வேட்கை பற்றிக்
கொள்ளியாய் எரிந்த காலம்
கோழைகள் தானும் மெத்தத்
துள்ளியே எழுந்த காலம்
துணிந்துதம் உயிரைப் பரிசாய்
அள்ளியே வைத்த காலம்
அப்பப்பா......புயலே வீசும்!

பாரத தேசம் இந்தப்
பாதையில் நடந்த வேளை
பாரதி என்பான் உந்தன்
பழம் பெரும் நாட்டில் நின்று
போரதிர் செய்வான் கவிதை
பொங்குமாங் கடலைப் போல!
வேரது சாயும் அந்த
வெள்ளையர் ஆட்சிக் கன்றே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையர் காத்தோடு
விடுதலை உனக்குத் தந்தான்
கொள்ளையாய்ப் படுத்தோமென்றோர்
கொண்டுமே சிறையில் வைத்த
கிள்ளையே! உன்னை மீட்டு
கேள்வியே அறியா மக்கள்
உள்ளத்தில் வைத்தான் அம்மா
ஊர்வலம் வந்தாய் நீயே!

சுதந்திரம் பெற்றாய் என்று
சூழ்ந்துமே உன்னை மக்கள்
இதந்தரு பாட்டுப்பாடி
இனிமையில் திளைத்த வேளை
நிதமிலை எதுவு மென்ற
நிச்சய வாக்கு மெய்க்க
கதையது மாறு மெங்கள்
கடல் சூழ் இலங்கை நாட்டில்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழமா நகரிலே . . . .

இலங்கையை ஆளும் வர்க்கம்
எரிந்திடும் பொருமைத் தீயால்
சலங்கை போல் கொஞ்சு மெங்கள்
சங்கத்து மகளே! உந்தன்
நலங்களைக் கெடுக்கும் வண்ணம்
'நற்பணி' செய்தார் நாளும்
தலங்களும் பறித்தார்! ஆங்கே
தம் குடி ஏற்றினரே!

அன்னியர் பிடியில் மீண்டும்
அடிமையாய்ப் போனாய் என்று
கண்மணி! நாங்கள் சேர்ந்து
கதறினோம்! முடிவாய் ஒன்று
எண்ணினோம்! யுத்தம் செய்து
எந்திரு உன்னைக் கொள்ள
பண்ணினோம் சபதம் நாங்கள்
பாரதம் நடத்துகின்றோம்!

தருக நீ பாவாய் உந்தன்
தனிப் பெரும் ஆசிச் செல்வம்
வருக நீ பாவாய் எங்கள்
வலக்கரமாக! வெற்றி
பெருகவே செய்வாய் நீயே!
பிள்ளைகள் எல்லாம் கூடி
உருகவே கேட்டு நின்றோம்
ஓடோடி வருவாய் தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர் வாகரைவாணனின்
## கருத்தோவியங்கள்:-

- எண்ணத்தில் நீந்துகிறேன்
  (கவிதைத் தொகுதி)
- துரோணர் சபதம்
  (நாடகம்)
- பயணம்
  (கவிதைக் கோவை)
- சுட்ட பொன்
  (கவிதைக் கோவை

## அடுத்த வெளியீடுகள்:-

- சித்திரைப்பாவை
  (நெடும்பாடல்)
- வேஷங்கள் கலைகின்றன
  (சிறுகதைத் தொகுதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org